

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக புதிதாக நியமிக்கப்பட்ட நாகனி செந்தில்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார்கள்.

### ரூ.928 கோடியில் பாமாயில், துவரம் பருப்பு கொள்முதல்!

# விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள்!

## உணவு - உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை, ஜூலை 16- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த 928 கோடி ரூபாய் மதிப்பிற்குப் பாமாயில் மற்றும் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை வருமாறு :-



வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தவும் மக்களுக்கு ஊட்டச்சத்து கிடைத்திடவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் 10.07.2023 அன்று அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் விலைவாசி உயர்வு தொடர்பாக நடத்திய ஆய்வுக் கூட்டத்தினைத் தொடர்ந்து என் தலைமையிலும் தலைமைச் செயலாளர் முன்னிலையிலும் விலைக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டம் 11.07.2023 அன்று நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய வர்த்தகம் & தொழில் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகத் திட்டம் மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் கோதுமை மற்றும் 10,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்திடக் கோரி கடிதம் எழுதியிருந்தார். விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தும் விதமாக, உடனடியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 40,000 மெ.டன் துவரம் பருப்பு 464.79 கோடி ரூபாய்க்கும் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023 மாதங்களுக்குத் தேவையான 5.10 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் 463.48 கோடி ரூபாய்க்கும் மொத்தம் ரூ.928.27 கோடி மதிப்பில் கொள்முதலுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. துவரம் பருப்பு மற்றும் பாமாயில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்து மண்டலக் கிடங்குகளிலும் இறக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அந்தக் கிடங்குகளிலிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தக்காளி விலை உயர்வினால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க நியாயவிலைக் கடைகள் மூலமாக தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய் விலையில் வழங்கப்பட்டுவருகிறது. இன்று முதல் சென்னையில் ஏழு அமுதம் அங்காடிகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் ஏழு நியாயவிலைக் கடைகளிலும் தக்காளி கிலோ ஒன்றிற்கு 60 ரூபாய்க்கும் துவரம் பருப்பு அரை கிலோ 75 ரூபாய்க்கும்

உளுந்தம் பருப்பு அரை கிலோ 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டு வருகிறது.

இதற்குத் தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்பட்டு வரும் விலைக் கட்டுப்பாட்டு நிதி பயன்படுத்தப் படுகிறது.

குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத்துறை மூலமாகவும் இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்படாமலிருக்கவும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் விலைவாசி உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க மேற்குறிப்பிட்டவாறு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.ள

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

# தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் நாட்டிய விழா!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

## தலைமை: வாகை சந்திரசேகர்! முன்னிலை: விஜயா தாயன்பன்!

சென்னை, ஜூலை 16- தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாட்டிய விழா நடைபெறுகிறது.

இன்று (ஜூலை 16 ஞாயிற்றுக்கிழமை) சென்னை - இராஜா அண்ணாமலை புரம் முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கில் இவ்விழா நடைபெறுகிறது.

**16.7.2023**

16.7.2023 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும் விழாவில் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்றுப் பேசுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாப் பேருரையாற்றுகிறார்.

சென்னை - சிதம்பரம் அகாடமி ஆஃப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் - கலைமாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளி வழங்கும் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' இசை நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

# மதுரையில் 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' காணும் - முதல்வருக்கு நன்றி!

## அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழக மாநிலத் தலைவர் மு.ராஜேஸ்குமார் அறிக்கை!

சென்னை, ஜூலை 16- மதுரையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டின் தென்பகுதி மக்களின் அறிவுப் பசிக்கு சிறந்த இடமாக விளங்கும் என தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சங்கத்தின் சார்பில் அதன் மாநிலத் தலைவர் மு.ராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தென்னகத்தின் அறிவுக் களஞ்சியம். மதுரையின் பிரம்மாண்டம், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தில் உதித்த "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" ஆறு தளங்களுடன் நவீன காலத்திற்கேற்ற வகையிலான டிஜிட்டல் வடிவமைப்புடன் ரூ.206 கோடி மதிப்பில் 2.13 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாகியுள்ளது தமிழ்நாட்டின் தென்பகுதி மக்களின் அறிவுப் பசிக்கு சிறந்த இடமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

கல்விப்பணியில் நூலகங்கள் பெரும் பங்காற்றுகின்றன அந்த வரிசையில் பொது நூலகத்துறையின் மணிமகுடத்தில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் வைரமாக ஜொலிக்க தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சி & டி சங்கத்தின் சார்பில் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு முதுகுளத்தூரில் மாபெரும் கிராமிய கபடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியினை பிற்படுத்தப்பட்ட நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜ கண்ணப்பன் துவக்கி வைத்தார். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் ஆப்பனூர் ஆறுமுகவேல், முதுகுளத்தூர் பூபதி மணி, கோவிந்தராஜ், சாயல்குடி ஜெயபால், சாயல்குடி குலாம், முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜகான் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஜனநாயக விரோதச் செயல் புரியும் ஆளுநரை குடியரசுத் தலைவர் திரும்பப் பெறவேண்டும்!

இந்திய அரசியல் வரலாற்றில் சுதந்திர இந்தியாவில் 1947 க்கு பிறகு மாநில அரசுகள் இந்தியா முழுவதும் செயல்பட்டு வருகிறது மாகாணமாக இருந்த அரசுகளில் மொழிவாரியாக தமிழ்நாடு கேரளா கர்நாடகா ஆந்திரா இப்பொழுது தெலுங்கானா உட்பட தென்னிந்தியாவில் மாநில வாரியாக மக்களால் தேர்தெடுக்கப்பட்டஅரசுகள் செயல்பட்டு வருகிறது

இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களுக்கும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஆளுநர்களை நியமிப்பார்கள் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல.

மக்கள் பிரதிநிதிகளும் அல்ல ஆளுநர்களாக இருப்பவர்கள் ஒரு அரசியல் கட்சியில் இருந்து பணியாற்றியவர்களாக இருந்தாலும் அவர்கள் ஆளுநராக பதவி ஏற்கும் பொழுது எந்த அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்காமல் கட்சிஉறுப்பினர்களாக இல்லாமல் நடுநிலையோடு செயல்படுகிற ஒருவராக இருக்க வேண்டும் என்பதுதான் இதுவரை நடைமுறை எல்லா ஆளுநர்களும் மாநில அரசுகளின் மக்கள் நலத்திட்டங்களை மக்களுக்காக புதிதாக ஒரு சட்டம் இயற்றினால் சட்டமன்றத்தில் இயற்றபடுகிற சட்ட முன்வடிவு சட்டத் திருத்தங்கள் அமைச்சர்கள் மாநில கோரிக்கைகள் மூலம் என்னென்ன திட்டங்கள் கொண்டு வருகிறார்களோ அதற்கு அரசு ஒதுக்குற நிதியை பயன்படுத்துவதற்கும் இப்படி எல்லா திட்டங்களுக்கும் எல்லா அனுமதி கொடுத்தும். செயல்களுக்கும் உறுதுணையாக கையெழுத்திட்டு செயல்படுவதுதான் இதுவரை ஆளுநர்களுடைய அரசோடு ஒத்துப்போகிற செயலாக இருந்து வந்தது



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

பி.ஜே.பி. அரசு இந்தியாவில் ஒன்றிய அரசு அமைத்த பிறகு எல்லா மாநிலங்களிலும் ஆர் எஸ் எஸ் பயிற்சி பெற்ற பி.ஜே.பி. உடைய நிர்வாகிகளை ஆளுநர் களாக நியமித்த பிறகு அரசு அதிகாரிகளாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் பி.ஜே.பி. அரசுக்கு ஆதரவாக பணியாற்றியவர்கள் பட்டியல் எடுத்து அதில் இவர்களுக்கு வேண்டிய வர்களை ஆளுநர்களாக நியமித்து மாநில அரசுக்கு எதிராக அரசியல் கட்சித் தலைவர்களைப் போல் எதிர்க்கட்சித் தலைவர்களைப் போல் இவர்கள் செயல்படுகிறார்கள்.

ஒரு முதலமைச்சர் கடிதத்திற்கு பதில் கொடுக்கின்ற பொழுது அரசினுடைய கடிதத்திற்கு பதில் கொடுக்கின்ற பொழுது அந்த ரகசியம் காக்கப்பட வேண்டும் அரசுக்கும் ஆளுநருக்கும்தான் அந்த விஷயம் தெரிய வேண்டும் தவிர வெளிப்படையாக ஆளுநர் தெரிவிப்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்குஎதிரான செயல்

ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற ஆளுநர் அரசுக்கு பதில் கடிதம் அனுப்புகின்ற பொழுது அரசினுடைய செயல் திட்டங்களுக்கு பதில் சொல்லி கடிதம் அனுப்புகின்ற பொழுது ஒப்புதல் கொடுக்கிற கடிதமாக இருந்தாலும் ஒப்புதல் கொடுக்காவிட்டாலும் எல்லாவற்றையும் அரசுக்கு தெரிவிப்பதற்கு முன்பே பத்திரிகையாளர்களுக்கு ஆளுநர் மாளிகை செய்தியாக வெளியிடுவது ஜனநாயக விரோத செயலாகும் இது போல் எந்த ஒரு ஆளுநரும் செயல்பட்டதுமில்லை நடந்து கொண்டதுமில்லை.

தமிழ்நாட்டினுடைய ஆளுநராக இருப்பவர் தமிழக அரசிடம் விளக்கம் கேட்டு அதற்கு விளக்கத்திற்கு அரசும் பதில் சொல்லலாம், பேசலாம், ஆனால் வெளிப்படையாக பாரதிய ஜனதா கட்சி உடைய மாநில தலைவரும் ஒரு சிலரும் இவருக்கு என்ன சொல்லுகிறார்களோ அதைக் கேட்டு அவர்களுக்கு உகந்தது போல் அவர்களின் எண்ணங்களாக அதை பிரதிபலிக்கிற விதத்தில் பாரதிய ஜனதா கட்சியின் செய்தி தொடர்பாளர் போல் செயல்பட்டுக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது

தமிழக அரசின் அனைத்து செயல்பாட்டிலும் இவருக்கு சம்பந்தமே இல்லாத சூழ்நிலையில் ஒட்டுமொத்த தமிழக மக்களின் எண்ணங்களுக்கு எதிராக விரோதமாக திராவிடத்தை பற்றி விமர்சனம் செய்வது அரசினுடைய செயல்பாடுகளை விமர்சனம் செய்வது மாநில மக்களின் உண்மையான தமிழ்நாடு என்கிற இந்த மாநில பெயரில் களங்கம்ஏற்படுத்திப் பேசுவது

பொதுவாக இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்திலும் ஆளுநர்கள் மாநில அரசோடு ஒத்து போகாமல் தேவையில்லாத கருத்துக்களை வெளிப்படுத்தி ஒன்றிய அரசுக்கு ஆதரவாக புது டெல்லி மேற்கு வங்காளம் ஓரிசா தெலுங்கானா பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் தவறாக செயல்பட்டு வருகிறார்கள்.

ஆனால் ஒரு மாநில அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்கள் முழு அதிகாரத்தில் தலையிடுவது குறிப்பாக ஒரு அமைச்சரை நீக்குங்கள் என்று கடிதம் அனுப்புவது சில நாட்களுக்கு பிறகு நீக்கியதாக அறிவிப்பது இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் இல்லாத ஒரு அதிகாரத்தை வரம்பு மீறி அமல்படுத்துவது போல் செயல்படுவது ஜனநாயகத்தின் வரம்பு மீறிய செயல் இப்படி தன்னிச்சையாக செயல்படும் ஆளுநரை குடியரசுத் தலைவர் அவர்கள் திரும்பப் பெற வேண்டும் பதவியில் இருந்து நீக்க வேண்டும்

எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் அரசு சொல்கிற கருத்துக்கு தான் இவர் செவி சாய்த்து செயல்பட வேண்டுமே ஒழிய எதிர்க்கட்சித் தலைவர்கள் அரசுக்கு எதிராக செயல்படுவது போல் செயல்படுவது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வன்மையாக கண்டிக்கிறார்கள்.

மக்களால் தேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களாட்சி தத்துவத்தை கடைபிடித்து மக்களின் ஏகோபித்த ஆதரவோடு தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் தளபதி அவர்கள் ஐந்து மணி நேரத்தில் ஆளுநர் சர்வாதிகார போக்கோடு செயல்பட்டு அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதாக அறிவித்த இந்த அடாவடித்தனமான அறிவிப்பை அடக்கி காட்டினார் முதலமைச்சர். ஒட்டுமொத்த மக்களும் கண்டித்தனர் தமிழ்நாடு முழுவதும் அனைத்து ஊடகங்களிலும் ஒட்டுமொத்த மக்களும் கண்டன குரல் கொடுத்தார்கள்

ஒட்டுமொத்த தமிழ் மக்கள் வழக்கறிஞர்கள் முன்னாள் நீதி அரசர்கள் ஒட்டுமொத்தமாக கடுமையான குரல் கொடுத்து கவர்னரை திரும்ப பெற அழுத்தமாக குரல் கொடுத்த அத்தனை பேரும் முதலமைச்சர் செயல்பாட்டுக்கு உறுதுணையாக உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களும் சட்டப்படி சந்திப்போம் என்று கூறியதும் 8 கோடி தமிழ் மக்களும் கடுமையாக எதிர்ப்பதை பார்த்த ஒன்றிய அரசு உள்துறை இந்த கவர்னரின் நிலைப்பாட்டை நிறுத்தி வைக்க ஆணையிட்டது ஆளுநர் முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் கடிதம் அனுப்பியதில் அமைச்சர் நீக்கம் என்கிற அறிவிப்பை நிறுத்தி வைப்பதாக கூறியிருக்கிறார். எந்த சூழ்நிலைகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் தலைவராக தேர்ந்தெடுத்து முதலமைச்சராக நியமிக்கிறார்கள் முதலமைச்சருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதும் முதலமைச்சர் அவர்களோடு அமைச்சர் பெருமக்கள் பட்டியலை முதலமைச்சர் கொடுத்தால்

அதை ஏற்றுக் கொண்டு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதற்கு மட்டும் தான் இவருக்கு இருக்கிற அதிகாரம் அரசு எடுக்குற முடிவுகளை செயல்படுத்த மட்டும்தான் அதிகாரம்

ஆளுநர் அவர்கள் செயல்பாடு என்பது அரசினுடைய திட்டங்களுக்கும் செயலுக்கும் உகுந்ததாக இருக்க வேண்டுமே தவிர அமைச்சரவையில் அமைச்சராக இருக்கிற ஒருவர் மீது காழ்ப்புணர்ச்சியோடு ஒரு அரசியல் கட்சித் தலைவரை போல் எதிர்க்கட்சித் தலைவரைப் போல் கருத்துக்களை தெரிவிப்பது கடிதங்கள் எழுதி ரகசியம் காக்க வேண்டிய கடிதங்களை பத்திரிகைகளுக்கு கொடுப்பது இதெல்லாம் ஜனநாயக நாட்டில் ஒரு நேர்மையான ஆளுநருக்கு உகந்ததல்ல.

ஆளுநராக வந்ததிலிருந்து ஆட்சிக்கு எதிராக யாரையோ திருப்தி படுத்துவதற்காக அரசியல்வாதி போல் ஒரு அரசியல் கட்சித் தலைவர் போல் செயல்படுவதை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வன்மையாக கண்டிக்கிறார்கள் இனிமேல் இது போல் நடந்தால் நீங்கள் மக்களை அவமதிப்பதும் சீண்டிப் பார்ப்பதுமாக இருப்பதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

ஆளுநருக்கு மாநில அரசு என்ன சொல்லுகிறதோ என்ன செய்கிறதோ அதை ஏற்றுக்கொண்டு அரசோடு ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதுதான் ஆளுநரின் கடமை அதை மறந்து விடக்கூடாது. ஆளுநருக்கு பிடிக்கவில்லை என்பதற்காக ஒரு அமைச்சரை நீக்கவும் முடியாது. ஆளுநருக்கு பிடித்திருக்கிறது என்பதற்காக அவரே ஒருவரை அமைச்சராக நியமிக்கவும் முடியாது.

முதலமைச்சருக்கு யாரை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும் யாரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் கடிதம் கொடுக்கிறாரோ அவர்களை நீக்க வேண்டும் ஒருவரை அமைச்சராக நியமிப்பதும் நீக்குவதும் அவரை வேண்டும் என்பதும் வேண்டாம் என்பதும் முதலமைச்சருடைய முழு அதிகாரம் பெற்ற செயல் அதில் தலையிடுவதற்கு ஆளுநருக்கும் மற்றவர்களுக்கும் எந்த அதிகாரமும் எந்த தகுதியும் இல்லை.

இந்த ஆளுநர் சொல்லுவதை பார்த்தால் ஒன்றிய அரசில் இருக்கிற அமைச்சர்களில் எத்தனையோ பேர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகமான பேர் ஆறு வழக்கு ஐந்து வழக்கு என்று சுமார் பத்து ஆண்டு காலமாக நடத்தப்பட்டு விவாதிக்கப்பட்டு தீர்ப்பு சொல்லுகிற நிலைப்பாட்டில்பல வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏராளமான வழக்குகள் தீர்ப்பு சொன்னால் அமைச்சராக இருப்பவர் பதவி இழக்க வேண்டியது வரும் எம்.பி. ஆக இருப்பவரும் பதவி விலக வேண்டி வரும் இவர்கள் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்க முடியாது என்கிற சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்வார்கள் அதனால் எந்த தீர்ப்பும் சொல்லாமல் இவர்களை பாதுகாத்து வருகிறது ஒன்றிய அரசு.

ஏன் குடியரசுத் தலைவர் அவர்கள் வழக்குகளில் சிக்கியுள்ள ஒன்றிய அரசினுடைய அமைச்சர்களையோ பாராளுமன்ற உறுப்பினர்களையோ அவர் இஷ்டம் போல் நீக்க முடியுமா எப்படி நீக்க முடியும் பிரதமர் யாரை அமைச்சராக வேண்டாம் என்று நினைக்கிறாரோ அவரை அவரால் நீக்க முடியும் பிரதமர் யாரை அமைச்சராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறாரோ அவருக்கு பதவி பிரமாணம் செய்வது வைப்பதுகுடியரசு தலைவரின் கடமை.

இதே நிலைப்பாடுதான் மாநில அரசிலுள்ள ஆளுநருக்குள்ள அதிகாரம் ஒரு ஆளுநர் என்பவர் யாரோ ஒருவர் எழுதிக் கொடுப்பதை படிக்க கூடாது அரசு சொல்லுவது தான் ஆளுநருக்கு வேதவாக்காக இருக்க முடியும் ஒரு இயக்கத்தின் தலைவர் அல்ல ஆளுநர் .

அ.தி.மு.க. என்கிற கட்சி மாநில அரசுகளில் ஆளுநரின் தலையீடு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் 1993 லிருந்து 1994/1995 ஆண்டுகளில் அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அவர்கள் ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி அவர்களை கடுமையாக எதிர்த்தார்கள்.

அவர் காரை எல்லாம் வழிமறித்து ஆர்ப்பாட்டம் போராட்டம் செய்ததை மக்கள் மறக்க மாட்டார்கள் அவரை இழிவுபடுத்தி சட்டமன்றத்தில் பேசியதும் மக்கள் மறக்க மாட்டார்கள். அவ்வளவு கடுமையாக ஆளுநர்களை எதிர்த்த ஒரு கட்சியினுடைய நிர்வாகிகள் ஆளுநருக்கு ஆதரவாக ஜால்ரா அடிப்பதும் இழிவாக மலிவாக கேவலமாக செயல்படுவதை பார்த்து ஒட்டுமொத்த தமிழக மக்களும் எள்ளி நகையாடுகிறார்கள்.

ஜனநாயக வரம்பு மீறி செயல்படுவதும் ஆளுநரை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எதிர்க்கிற நிலையில் இருப்பதால் இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர் அவர்கள் அமைதியாக இருக்காமல் தமிழகத்தில் மக்கள் விரோதமாக செயல்படும் ஆளுநரை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் அவர் அமைதியான மாநிலத்தில் அரசியல்வாதி போல் செயல்படுவது பேசுவது கருத்து தெரிவிப்பது ஒரு ஜனநாயக பாரம்பரியத்தை குழி தோண்டி புதைக்கிற வேலையில் தமிழ்நாடு ஆளுநர் இறங்கிவிட்டார். இவரை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் அல்லது டிஸ்மிஸ் செய்ய வேண்டும்.

ஒன்றிய அரசு ஆளுநர்களை நியமிக்க பெயர் பட்டியல் கொடுக்கின்ற பொழுது ஜனநாயக மரபுகளை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை மதிக்கின்ற மாண்புமிக்க ஒரு நல்ல நடுநிலையோடு செயல்படுபவர்கள் போற்றுதலுக்கு உரியவர்களை நியமிக்க வேண்டும்

இந்தியாவின் இறையாண்மையை காப்பாற்றுவதற்கு நீங்கள் தான் நல்ல முடிவு எடுத்து செயல்படுத்த வேண்டும் என ஒட்டு மொத்த இந்திய மக்கள் உங்களை நம்புகிறார்கள்.